## தமிழ்நாட்டில் முக்கிய தலைவர்கள் பிறந்த நாளில்

# பள்ளி மாணவர்களுக்கு இனிப்புப் பொங்கல்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜுன் 20–

பள்ளிகளில் முக்கிய தலைவர்களின் பிறந்த நாளில் இனி மதிய உணவுடன் சேர்த்து கூடுதலாக இனிப்பு பொங்கலும் வழங்கப்படும் என சமூக நலத்துறை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தில் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. அதனுடன் 1 முதல் 5ம் வகுப்பு வரையிலான குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டமும் தற்போது அமலில் உள்ளது. இந்நிலையில் முக்கிய பிரமுகர்கள் பிறந்தநாளில் மதிய உணவுடன் கூடுதலாக இனிப்புப் பொங்கல் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து சமூக நலத்துறை செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன் வெளியிட்ட அரசாணை விவரம்: பள்ளி மாணவர்களுக்கு முக்கிய தலைவர்கள், பிரமுகர்களின் பிறந்த நாளில் இனிப்புப் பொங்கல் மட்டும் தற்போது வழங்கப்படுகிறது. வழக்கமான மதிய உணவு வழங்கப்படுவதில்லை. இதை மாற்றி இனிமேல் மதிய உணவுடன் சேர்த்து, சர்க்கரைப் பொங்கலும் அளிக்கலாம் என்று சமூக நலத் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் மாணவர்களுக்கு முக்கிய தலைவர்களின் பிறந்த நாளில் மதிய உணவுடன் சேர்த்து இனிப்புப் பொங்கல் வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. இதற்காக ஒரு மாணவருக்கு ரூ.2 ஒதுக்கப்படுகிறது. இதன் மூலம் 42.71 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள். இதற்கான செலவீனத்துக்காக ரூ.4.27 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



சென்னை தலைமைச் செயலகத்தில், நேற்று (19.06.2024) கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில், கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் 2024–2025 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் மானியக் கோரிக்கை மீதான அறிவிப்புகள் குறித்தும், 2025 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்பட வேண்டிய வேட்டி சேலை இரகம் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறி ஆணையர் கே. விவேகானந்தன், மற்றும் துணிநூல் ஆணையர் முனைவர். மா. வள்ளலார், மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 118 அ வட்டத்தில் சேலம் சுஜாதா பேசுகிறார்!

*சென்னை, ஜுன் 20-*

*சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்குப் பகுதி 118 அ வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு, மற்றும் திராவிட மாடல் அரசின் மூன்றாண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் இன்று (20.6.2024) மாலை 6 மணிக்கு தேனாம் பேட்டை பிள்ளையார் கோயில் தெருவில் வட்டச் செயலாளர் எஸ்.என்.கே. ராமன் தலைமையில் பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை, ஜெ.நற்குணநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.*

*மல்லிகா யுவராஜ் எம்.சி. ,வி.ஆர்.விஜய், மு.பாஸ்கர், ஜெ.வரதராஜன். கே.காமராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*இக்கூட்டத்தில தலைமைக் கழகப் பேச்சாளர் சேலம் சுஜாதா சிறப்புரையாற்றுகிறார்.*

*மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு , மு.க.தமிழரசு, தயாநிதிமாறன் எம்.பி., அன்பகம் கலை, மருத்துவர் நா. எழிலன் எம்.எல்.ஏ., நுங்கை வி.எஸ்.ராஜ், டாக்டர் கலை கதிரவன், து.விக்டர், வி.எஸ். கலை, ஆர்.என்.துரை, சங்கீதா, அகஸ்டின்பாபு, பா. ராபர்ட், வெற்றிசெல்வி, ஜம்புலிங்கம், கோ.ரவி, வெங்கடேசன், வைலட் மேரி, ஜெயக்குமார், கோ. யுவராஜ், ஆ.பாபு, பீட்டர் ஜான், எல்.தவமணி, சத்திய பெருமாள், தேவராஜ், மகேஷ், விஷ்ணு மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர். வேல்முருகன், மூர்த்தி நன்றி கூறுகின்றனர்.*



நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், வேலூர் மக்களவை உறுப்பினராக இரண்டாவது முறையாக தேர்ந்தெடுத்த வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, ஆலங்காயம் பேரூர் புலவர்பள்ளி, தர்மராஜபுரம், ஆலங்காயம், பெத்தூர், மார்க்கேட் மூலை, ஆலங்காயம் ஆதிதிராவிடர் காலனி, பங்கூர் ஆகிய பகுதிகளில் வாக்காளர் பெருமக்களையும், கழக தொண்டர்களையும் கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. நேரில் சந்தித்து நன்றிகளை தெரிவித்துக்கொண்டார். உடன் பேரூர் கழக செயலாளர் ஸ்ரீதர், பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.

## வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**20.6.2024 - ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி மாதனூர் கிழக்கு ஒன்றியம்**

| நேரம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|
| காலை 8.20 மணி | திருமலைகுப்பம் |
| காலை 8.40 மணி | பாலூர் |
| காலை 9.00 மணி | மாதனூர் |
| காலை 9.20 மணி | தோட்டாளம் |
| காலை 9.40 மணி | குளிதிகை ஜமீன் |
| காலை 10.00 மணி | வெங்கிரி |
| காலை 10.20 மணி | கீழ்முருங்கை |
| காலை 10.40 மணி | வடபுதுப்பட்டு |
| காலை 11.00 மணி | சோலூர் |
| காலை 11.20 மணி | பெரியாங்குப்பம் |
| காலை 11.40 மணி | நாச்சார் குப்பம் |
| பகல் 12.00 மணி | கென்னடி குப்பம் |
| பகல் 12.20 மணி | ஆலங்குப்பம் |
| பகல் 12.40 மணி | விண்ணமங்கலம் |
| பகல் 1.00 மணி | மின்னூர் |
| பகல் 1.20 மணி | செங்கிலிகுப்பம் |
| பகல் 1.30 மணி | மாராப்பட்டு |
| பகல் 2.00 மணி | நாய்க்கனேரி |

**20.6.2024 -ஆம்பூர் சட்டமன்ற தொகுதி ஆம்பூர் நகரம்**

| நேரம் | இடம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| மாலை 4.00 மணி | மளிகை தோப்பு | வார்டு 1, 2, 15, 16 |
| மாலை 5.00 மணி | கஸ்பா -எ மந்தகரை | வார்டு 4, 5, 6 |
| மாலை 5.30 மணி | கஸ்பா - B காதர்பேட்டை | வார்டு 12, 13,22 |
| மாலை 6.00 மணி | V.A. கரீம் ரோடு | வார்டு 20,23, 24 |
| மாலை 6.30 மணி | எல்லையம்மன் கோயில் கிருஷ்ணாபுரம் | வார்டு 17, 18, 19 |
| மாலை7.00 மணி | விநாயகர் கோயில் அருகில் பை-பாஸ் சாலை | வார்டு 35, 36 |
| மாலை 7.30 மணி | SK ரோடு சாணாங்குப்பம் | வார்டு 32, 33, 34, 27 |
| மாலை 8.00 மணி | ரெட்டி தோப்பு | வார்டு 28, 29, 30, 31 |
| மாலை 8.30 மணி | புதுமனை | வார்டு 8, 9 |

**21.6.2024 -ஆம்பூர் சட்டமன்ற தொகுதி மாதனூர் மேற்கு ஒன்றியம்**

| நேரம் | இடம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| காலை 8.30 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | மேல்குப்பம் |
| காலை 8.45 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | பாப்பனப்பள்ளி |
| காலை 9.00 மணி | அரசமரம் நூலகம் எதிரில் | வடச்சேரி |
| காலை 9.15 மணி | பழைய தி.மு.க. அலுவலகம் எதிரில் | சின்ன பள்ளி குப்பம் |
| காலை 9.45 மணி | RI கோட்ரஸ் எதிரில் | எம்.எஸ்.குப்பம் |
| காலை 10.00 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | வடகரை |
| காலை 10.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | வீராங்குப்பம் |
| காலை 10.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | தென்னம்பட்டு |
| காலை 11.00 மணி | பஸ் நிலையம் எதிரில் | மலையாம்பட்டு |
| காலை 11.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | அரங்கல்துருகம் |
| காலை 11.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | கதவாளம் |
| காலை 11.45 மணி | ராமர் கோயில் அருகில் | பார்சனாப்பள்ளி |
| காலை 12.00 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | மோதகப்பள்ளி |
| பகல் 12.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | குமாரமங்கலம் |
| பகல் 12.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | கம்மகிருஷ்ணபள்ளி |
| பகல் 12.45 மணி | பஸ் நிலையம் எதிரில் | கரும்பூர் |
| பகல் 1.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | வெங்கடசமுத்திரம் |
| பகல் 1.45 மணி | கூட்ரோடு பஸ் நிலையம் | மிட்டாளம் |

**21.6.2024 - குடியாத்தம் சட்டமன்ற தொகுதி மாதனூர் மத்திய ஒன்றியம்**

| நேரம் | இடம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| மாலை 4.00 மணி | தேவலாபுரம் | பஸ் நிலையம் |
| மாலை 4.20 மணி | துத்திப்பட்டு | பஸ் நிலையம் |
| மாலை 4.40 மணி | பெரியவரிகம் | பஸ் நிலையம் |
| மாலை 5.00 மணி | சின்னவரிகம் | பஸ் நிலையம் |
| மாலை 5.20 மணி | கைலாசகிரி | பஸ் நிலையம் |
| மாலை 5.40 மணி | நரியம்பட்டு | ஊர் மத்தியில் |
| மாலை 5.55 மணி | அயித்தம்பட்டு | கோயில் எதிரில் |
| மாலை 6.00 மணி | சாத்தம்பாக்கம் | ஊர் மத்தியில் |
| மாலை 6.20 மணி | பெரிய கொம்மேஸ்வரம் | ஊர் மத்தியில் |
| மாலை 6.40 மணி | சோமலாபுரம் ஊராட்சி | ஊர் மத்தியில் |

## தொழிற்சாலைகள் நகரமயமாதல் – சமூக வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னிலை!

### இந்திய மேலாண்மை கழக ஆய்வில் தகவல்!

*புதுடெல்லி, ஜுன் 20 -*

*தொழிற்சாலைகள், நகரமயமாதல் மற்றும் சமூக வளர்ச்சி குறியீடு ஆகியவற்றில் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது இந்திய மேலாண்மை கழகத்தின் ஆய்வில் தெரியவந்துள் ளது.*

*தொழிற்சாலைகள், நகரமயமாதல் மற்றும் சமூக வளர்ச்சி குறித்து, ஐஐஎம் எனப்படும் இந்திய மேலாண்மை கழகத்தின் சார்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் இந்தியாவில் உள்ள மற்ற சில மாநிலங்களோடு ஒப்பிடும்போது பல்வேறு துறைகளில் தமிழ்நாடு முன்னிலையில் இருப்பது தெரியவந்துள்ளது. ஒன்றிய அரசுக்கு அதிக வரி வருவாய் வழங்கும் மாநிலங்களில், தமிழ்நாடு முன்னிலையில் உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளைப் பொருத்தவரையில் மகாராஷ்டிராவில் 28 ஆயிரம் தொழிற்சாலைகளும், குஜராத்தில் 22 ஆயிரம் தொழிற்சாலைகளும் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 36 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. அதேபோல தமிழ்நாட்டின் சமூக வளர்ச்சி குறியீடு மற்ற மாநிலங்களை விட 10 விழுக்காடு கூடுதலாக இருப்பதும் இந்திய மேலாண்மை கழகத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது.*

## குறைவான மழைப்பொழிவு- வானிலை ஆய்வு மையம் தகவல்!

*புதுடெல்லி, ஜுன் 20 -*

*டெல்லி, ராஜஸ்தான், பீகார் உள்ளிட்ட வடமாநிலங்களில் வெப்ப அலை வீசி வருகிறது. இதனால், தண்ணீர் பற்றாக்குறை, வெப்பகால நோய்கள் என மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்டு உள்ள செய்தியில், நடப்பு மாதத்தில் இந்தியாவில் சராசரி மழைப்பொழிவானது, இயல்புக்கும் குறைவாக இருக்கக் கூடும் என தெரிவித்து உள்ளது.*

*இவற்றில், தென்னிந்திய மாநிலங்கள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இயல்பில் இருந்து இயல்புக்கும் கூடுதலான மழைப்பொழிவு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் இன்று (20.06.2024 - வியாழக்கிழமை) மாலை 3.00 மணி அளவில், விழுப்புரம் "கலைஞர் அறிவாலயத்தில்" விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** 1. முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா,
2. கழக ஆக்கப் பணிகள் - குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 19.06.2024

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மீஞ்சூர் மு. கேசவன்
### ஜுன் 20 (2019)



கழகம் துவங்கிய காலத்திலேயே, கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பொன்னேரி வட்டத்தில் கழகத்தை துவங்கியவர்.

பொன்னேரி வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற மும்முனைப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி ஆவடி மாநகராட்சிகுட்பட்ட 16, 9, 7, 33, 48, ஆகிய வார்டுகளில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கூடுதலாக 6 மின்மாற்றியை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார். ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதிச் செயலாளர்கள் பேபி சேகர், ஜி.ராஜேந்திரன், பொன். விஜயன், மண்டல குழு தலைவர்கள் அமுதா பேபிசேகர், அம்மு, மின்வாரிய அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

